Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

வாழ்நாள் முழுவதும்
வளமுடன் வாழ
அண்ணா
ஜீவாகாரம்
உடனடியாக உண்ணககூடிய
நிலையில் உள்ள சத்துணவு
விபரங்களுக்கு
அண்ணா கோப்பிக் கடை
இல.4 நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 29 ஞாயிற்றுக்கிழமை (12.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 175

## உத்தேச பொதுக்கட்டமைப்பில்

# இம் மாத இறுதிக்குள் கையொப்பம்

# முடியாவிட்டால் பதவி இராஜினாமா?

## ஜனாதிபதி அதிரடி முடிவு



(நமது நிருபர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான நிவாரண நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கு விடுதலைப் புலிகளுடன் இணைந்து மேற்கொள்ளப் படவுள்ள உத்தேசப் பொதுக்கட்டமைப் பில் இம்மாத இறுதிக்குள் கையெழுத்திட முடியாது போனால் தனது பதவியை இராஜினாமா செய்யப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க தீர்மானித்துள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## பொலநறுவையில் நேற்று மாலை தமிழ் இளைஞன் சுட்டுக் கொலை

(சொருவில)

பொலநறுவை மாவட்டம் சொருவில கிராமத்தில் நேற்றுப் பிற்பகல் தமிழ் இளைஞர் ஒருவர் வீதியில் வைத்து இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

இவர் சண்முகம் செல்வராசா (வயது 21) என அடையாளம் காணப்பட்டார். தம் முடைய நண்பர்களுடன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் இச் சம்பவம் நடந்ததாக அரங்கவெல பொலிஸார் தெரி வித்தனர்.

இவருடன் சைக்கிளில் சென்ற நண்பர் களான ப்பு (08 ஆம் பக்கம் பார்க்க)

## அலுவலக மாற்றம்

அன்பு வாசகர்களே! விளம்பரதாரர்களே! வர்த்தகப்பெருமக்களே! உங்கள் அன்பிற்கும் நன்மதிப்பிற்கும் பாத்திரமான வலம்புரிப்பத்திரிகையின் அலுவலகம் 11.06.2005 முதல் பிறவுண் றோட் இரண்டாம் ஒழுங்கையில் உள்ள அலு வலகத்தில் (நீராவியடிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில்) இயங்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

வலம்புரிக் குடும்பம்.

## மீளக்குடியமர்த்துமாறு கோரி தென்மராட்சி மக்கள் வீதிமறியல்

### ஏ-9 வீதி சில மணிநேரம் ஸ்தம்பிதம்

(திருநெல்வேலி)

தென்மராட்சி உசன் பகுதி மக்கள் ஏ-9 பாதையை மறித்து நேற்றுக் காலை 10 மணியிலிருந்து 11 மணிவரை ஆசைப் பிள்ளை ஏற்றத்திற்கு முன்னால் வீதி மறி யல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இம் மறியல் போராட்டம் காரணமாக ஏ-9 பாதையில் வழமையான போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டது.

முன்னதாக மிருசுவில் றோமன் கத் தோலிக்கப் பாடசாலையில் ஒன்றுகூடிய மக்கள் உயர் பாதுகாப்பு வலயம் காரண மாக தங்கள் வீடுகளை ஆக்கிரமித்துள்ள சிறிலங்கா (08 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குருநகர்ப் பகுதியில் நேற்று பூரண ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

யாழ். குருநகர் இளைஞர்கள் இருவர் கொழும்பில் இனந்தெரியாதோரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமையைக் கண் டித்து நேற்றுக் குருநகரில் முழுக் கத வடைப்பு நடத்தப்பட்டது.

கடந்த 5 ஆம் திகதி கொழும்புக் கோட்டையில் இருந்து மட்டக்குளி நோக்கிச் சென்றுகொண்டிருந்த யாழ். குருநகரைச் சேர்ந்த தேவதாசன் இமானுவேல் பிரான் சிஸ் டெனீசியஸ் இருவரும் இனந்தெரியா தோரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

இவர்கள் படுகொலை செய்யப்பட்ட தைக் கண்டித்து சம்பவம் நடந்த நாளி லிருந்து யாழ். குருநகர்ப் பகுதிகளில் சோக கீதம் இசைக்கப்பட்டு அக் கிராம மக்களால் துக்கம் கடைப்பிடிக்கப்பட்டது.

மரணமான இளைஞர்களின் இறுதி நல் லடக்க நிகழ்வு நேற்று இடம்பெற்றது. குருநகர்ப் பகுதியெங்கும் கறுப்புக் கொடி கள் பறக்கவிடப்பட்டு அனைத்து அன்றா டச் செயற்பாடுகளும் முடக்கப்பட்டு அக் கிராம மக்கள் தமது எதிர்ப்பினை வெளிப் படுத்தினர். இதனால் நேற்று அக்கிராமம் முழுமையாக வெறிச்சோடிக் காணப்பட் டது. இதேவேளை இளைஞர்களின் கொலை யுடன் தொடர்புடையவர்களை இனங்கண்டு தண்டனை (08 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா ஈ.பி.டி.பியின் முகாம் மீது கிளைமோர் குண்டுத் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதி குருமண் காடு பகுதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி யின் முகாமில் நேற்றுக்காலை 11.20 மணியளவில் கிளைமோர் குண்டுவெ டிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள் ளது.

இச்சம்பவத்தில் இராணுவப் புல னாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளதாக வும், இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர், பொலிஸ் கான்ஸ்ட பிள் ஒருவர் உட்பட 7 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சிப்பாய் எல்லப் பெருமருக்கன் எட்வேட் என்பவரும், கண்ணன் என்று அழைக்கப்படும் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவருமே உயிரிழந்துள்ளதாகப் பொலி ஸாரினால் அடையாளம் காணப்பட் டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

மிகவும் திட்டமிட்ட முறையில் பக் கத்துக் காணிக்கான எல்லையில் கட் டப்பட்டிருந்த மதிலோடு வைத்துத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெரும் சத்தத்துடன் இக்குண்டு வெடித்ததுடன் சில நிமிடங்களுக்கு துப் பாக்கிச் சூட்டுச் சத்தமும் கேட்டதாக மக்கள் (08 ஆம் பக்கம் பார்க்க)



## தேரரின் உண்ணாவிரதம் நேற்று இடைநிறுத்தம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரி வித்து சாகும்வரை உண்ணாவிரதமிருந்த ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பெ சோபிததேரர் நேற் றுக் காலை 9.20 மணியளவில் தமது உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவிற்கு கொண்டுவந்துள்ளார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் ஜனா திபதி மகாநாயக்க தேரர்களுக்கு வழங்கி யுள்ள (08 ஆம் பக்கம் பார்க்க)

SWISS
Mineral Water
Buy Swiss Mineral and win several lakhs worth of prices
Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59
Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63
சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காரைநகர் கிழவன்காடு
# கலாமன்ற ஆண்டு விழாச் சிறப்புமலர்
## 12-06-2005

## ஆதீன முதல்வரின் அருளாசி



அன்புசால் பெருந்தகையீர்!

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்இன்றுகலைவிழா நடத்துவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். கலைகள் மனிதனை பண்புள்ளவனாக ஆக்குகின்றன. இறைவனும் இயற்கையும் கலைகளோடு இணைந்து கொள்ளுகின்றன. இதனாலேயேநம் சமயத்தவர் கலைகளையே இறைவனாக கொண்டுவடிவம் கொடுத்து வாழுகின்றனர். இதற்கு அடையாளமாகவே இறைவன் நடராஜப்பெருமான் ஆடியவாறு திருநடனம் புரிகின்றார். இசைக்கு இணையானது எதுவும் இல்லை என்பர். இதற்கு அடையாளமாகவே கிழவன்காடு கலாமன்றத்தினர் கலை விழாவை நடத்துகின்றனர். அனைத்து மக்களையும் இக்கலையில் ஈடுபடச் செய்வதற்கு நவீன கலைகள் வளர்ந்து வரும் இக்காலத்தில் நம் பாரம்பரிய கலைகளை மேலெடுத்துச் செல்வது நம் கடமையாகும். குறிப்பாக இளைய தலைமுறையினர் மத்தியில் கலை விழுமியங்களை பரப்பவேண்டிய பொறுப்பு இம்மன்றங்களைச்சார்ந்ததாகும். இதனை மனதில் கொண்டு கலாமன்றம் செயற்படவேண்டியது அவசியமாகும். கலாமன்றத்தினுடைய பணிகள் சிறப்பாக நடை பெற்று காரைநகர் மக்களுக்கும் ஏனைய பிரதேச மக்களுக்கும் பயனுள்ளதாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

*நல்லை ஆதீனம், இரண்டாவது குருமஹா சந்நிதானம்*



## ஆசியுரை

"கருத்தின் உறைவிடமாகவும் அழகின் இருப்பிடமாகவும் அமைந்து உள்ளத்தில் உள்ளதை உள்ளவாறு வெளிப்படுத்தி உவகையூட்டி, தன்னலமும், பழிபாவங்களும் நிறைந்த உலகைவிட்டு நம்மை அப்பால் அழைத்துச்செல்கிறது கலை" என்றார் தாகூர்.

"கலை வாழ்வதற்கு வழிகாட்டும் ஒளிப்பந்தம்" என்பது மேலைத்தேசத்துப் பேரறிஞராகிய ஆஸ்கார் ஒயில்பு என்பாரின் கருத்து.

இசை, நடனம், நாட்டியம், ஓவியம், சிற்பம் முதலியன நுண்கலைகளாகும். முத்தமிழில் முன்னிற்கும் இயலுக்கும் பின்னிற்கும் நாடகத்திற்கும் இடையில் நின்று, இரண்டோடும் இணைந்து இயங்குவது இசை. எமது முன்னோர் மேற்படி கலைகளை நன்கு பயின்றிருந்தனர். ஆனால், இடைப்பட்ட காலத்தில் அவைகளைப் பயில்வோரின் தொகை மிகமிக அருகிவிட்டது. எனவே, இக்கலைகளுக்குப் புத்துயிர் கொடுப்பதற்குப் பல்கலைக்கழகத்தினரும் முன்வந்தனர். இந்த நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டே காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் ஆரம்பிக்கப்பட்டது.

மன்றம் சென்ற நான்கு ஆண்டுகளாகப் பண்ணிசை, நடனம், நாட்டியம், மிருதங்கக் கல்வி என்பனவற்றில் மாணாக்கருக்குப் பயிற்சியளித்து வருவது மிகமிக வியந்து பாராட்டுதற்குரியது. மாணாக்கர் ஆலயங்களுக்குச் சென்று பஜனை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

மன்றம் மேன்மேலும் தனது சேவைகளைச் சிறப்பாகச் செய்வதற்குக் கிழவன்காட்டில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் முருகப்பெருமானார் அருள்புரிவாராக.

மன்றத்துக்கு என் பாராட்டையும் ஆசியையும் தெரிவித்து அமைகின்றேன்.

சிவத்திரு. **க.வைத்தீசுவரக்குருக்கள்,**

*காரைநகர் தமிழ்வளர்ச்சிக் கழகத் தலைவர்*

## வளர்க முத்தமிழ்

ஈழத்துச் சிதம்பரத்தில் நர்த்தனம் புரியும் ஆடல்வல்லான் நடராஜப் பெருமானின் அருளாட்சி காரைநகரை இயக்கிக்கொண்டிருக்கிறது. சிவபூமியாகிய காரைநகரில் இடப்பெயர்வுக்குமுன் கலை, பண்பாடு, கலாசாரம், ஆன்மீக வளர்ச்சி உச்சநிலையில் இருந்தது. அந்த நிலை இடப்பெயர்வுடன் தளர்ச்சியடைந்து மீளவும் வளரத் தொடங்கியுள்ளது.

இந்த வளர்ச்சிப்படியில் கிழவன்காடு கலாமன்றம் பெரும்பங்காற்றி வருவது மகிழ்ச்சிக்குரியது. பண்ணிசை உள்ளிட்ட கலைத்துறை வளர்ச்சிக்கு இம்மன்றத்தினர் கடந்த நான்கு ஆண்டுகாலமாக சிறப்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் வாழும் சிறுவர்களின் ஆன்மீக, கலை ஈடுபாடுகள் இம்மன்றத்தின் முயற்சியினால் அதிகரித்துள்ளது. இவ்வாறான நல்ல முயற்சியில் ஈடுபடும் கலாமன்றத்தினரை வாழ்த்துவதுடன், மேலும் மன்றம் தனது செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு எல்லாம் வல்ல முருகனின் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன். எமது பிரதேச மக்களும் இம்மன்றத்தினரின் முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டுமெனவும் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

*வாழ்க கலாமன்றம்! வளர்க! இவர் தம் பணிகள்.*

**ப.விக்கினேஸ்வரன்**

தலைவர், வட இலங்கை சங்கீத சபை

## கலைவிழா

*இடம்* : யாழ்ற்ரன் கல்லூரி மண்டபம்

*காலம்* : 12.06.2005 ஞாயிற்றுக்கிழமை
பி.ப.2.00 மணி

*தலைவர்:* பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை
(கலாமன்றக் காப்பாளர்)


*பிரதம விருந்தினர்:* திரு.ப.விக்னேஸ்வரன்
(கல்விப்பணிப்பாளர், வலிகாமம், வட இலங்கை சங்கீதசபைத் தலைவர்)

*சிறப்பு விருந்தினர்:* திரு.ஸ்ரீமோகனன்
(உதவி அரசாங்க அதிபர், காரைநகர்)

திரு.ந.பரமசிவம்
(அதிபர் யாழ்ற்றன் கல்லூரி)

திரு.கானகன்
(அரசியல்துறைப் பொறுப்பாளர் காரைநகர்)

## கலைகள் மீண்டும் மலரட்டும்



செந்நெறிக்காவலர்களான அறிஞர்களும், கலைஞர்களும் வாழ்ந்து சைவமும் தமிழும் செழித்தோங்க நற்பணி செய்து வந்த காரைநகரில் ஆலயங்களுக்கும், விழாக்களுக்கும் செலவோரின் எண்ணிக்கை அருகி வரும் இக்கால சூழ்நிலையில் நீண்டகால இடைவெளியின் பின்னர் காரைநகரில் மிகப்பெரிய கலைவிழா ஒன்றை கிழவன்காடு கலாமன்றம் இன்று நடாத்துவதை அறிந்து பெருகிழ்வடைகின்றேன்.

இளைய தலைமுறையினருக்கு கலைகளைப் பயிற்றுவித்தால் மாத்திரம் போதாது அவர்கள் தாம் கற்ற கலைகளை அறிஞர் நிறைந்த அவைகளிலே அரங்கேற்றுவதற்கும் வாய்ப்பளிப்படும்போதுதான் அவர்கள் தமது கலைத்திறனில் முழுநிறைவடைகிறார்கள்.

கிழவன்காடு கலாமன்றம் இளங்கலைஞர்களைப் பயிற்றுவிப்பதோடு அவர்களுக்கான அரங்கேற்ற விழாவையும் பெருவிழாவாக இன்று நடாத்துவது நாட்டில் உள்ள ஏனைய கலாமன்றங்களுக்கு ஒரு முன்மாதிரியாக அமைகிறது.

கிழவன்காடு கலாமன்றத்தினரின் இன்றைய கலை விழா சிறப்புற நடைபெற, வாழ்த்துவதோடு, அவர்களின் கலைச்சேவையும் சமூகப்பணிகளும் இடையூறின்றி தொடர இறையருளை இறைஞ்சி நிற்கிறேன்.

**க.ஸ்ரீமோகனன்,**

**உதவி அரச அதிபர்.**

**காரைநகர்.**

## ஓங்கி வளர்க!



'இசையை வளர்ப்போம் இன்பம் பெறுவோம்' என்னும் மகுடவாசகத்தைக் கொண்டு விளங்கும் காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் கலைவிழா எடுப்பதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். காரைநகர் கிழவன்காடு கந்தசுவாமி கோவிலில் வெள்ளிக்கிழமை தோறும் பாடப்படும் பஜனை, பண்ணிசையுடன் பாடவேண்டும் என்ற நோக்கில் உருவானதே இம்மன்றம். ஆரம்பத்தில் பண்ணிசையை வளர்த்து சபைகள், கோயில்களில் தம் திறமையை வெளிக்கொணர்ந்து மேலும் வளர்ச்சியடைய சங்கீத வகுப்பு, நடன வகுப்பு, மிருதங்க வகுப்பு ஆகியவைகளையும் நடத்திவந்தது. இதுவரை நடத்திவந்த திரு.ந. சோதிநாதன் 02.06.2004 இல் பொதுக்கூட்டத்தைக்கூட்டி ஆர்வமுள்ள நிர்வாகசபை உறுப்பினர்களைத் தெரிவுசெய்து அவர்களின் பொறுப்பில் வழங்கியுள்ளார். அதன் பயனாக இம்மன்றம் இன்று பெருவிழாக் காண்கின்றது.

இடப்பெயர்வின் காரணமாக பின்னடைவைப்பெற்ற எம் ஊராகிய காரைநகர் மீண்டும் புத்துயிர்பெற்று மிளிரும் இவ் வேளையில் எமது கலை, பண்பாடு, விழுமியங்கள் யாவும் பேணப்படுதல் அவசியமாகும். இயல், இசை, நாடகத்துடன் கூடிய கலை நிகழ்ச்சிகள் கலையை வளர்ப்பதோடு பண்பாட்டு விழுமியங்களையும் வளரச்செய்யும் இளம் சமுதாயத்தினரிடையே மொழிப்பற்றையும் ஊர்ப்பற்றையும் இன உணர்வையும் வளர்க்க உதவும். மேலும் அறநெறிப் பாடசாலையைக்கொண்டு நடத்தும் இம்மன்றம் மாணவர்களின் அறிவை விருத்திசெய்வதோடு ஒழுக்கநெறியையும் வளர்த்துக் கொள்ளும்.

இத்தகைய மன்றம் சிறப்புற்று ஓங்கி வளர்ந்து சமுதாயம் வாழ வழிகாட்டுவதோடு தமிழ் கலை, கலாசாரமும் வளர வாழ்த்துகின்றேன்.

**பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை**

*காப்பாளர் - கிழவன்காடு கலாமன்றம்.*

## இசை, நடனக்கலையில் மிளிர்க!



சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெருமை காரைநகருக்கு உண்டு. இம்மண்ணில் பலதுறைகளிலும் புகழ் பெற்றோர் இங்குள்ளனர். அவ் வகையில் நாம் வாழும் இம்மண்ணை கல்வி, செல்வம், பண்பாடு ஆகியவற்றால் உயர்த்துகின்ற கடமை மக்களாகிய நம் எல்லோருக்கும் உண்டு. அவ்வகையில் இம்மன்றத்தைச் சிறப்பாக செயற்படுத் துபவர் என்னுடைய மாணவன் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். ஒவ்வொருவரும் ஏதோ ஒருகலையில் நாட்டமுடையவராய் இருப்பது மனதிற்கு அமைதியைத் தரும் என்பது எல்லோருடைய ஏகமனதான கருத்தாகும். ஆகவே, இக்கலாமன்றத்தில் அனேக மாணவ மாணவியர் இணைந்து பயின்று இசை, நடனக் கலையில் ஆற்றல்பெற்றவர்களாக மிளிரவேண்டுமென்று கூறி வாழ்த்துகிறேன்.

**க.பரமேஸ்வரி**

*விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.*

## விழாச் சிறப்புறட்டும்

சைவம், தமிழ், பண்பாடு, கலாசாரம் போன்றவற்றை போற்றிவாழும் முதன்மை வாய்ந்த கிராமமாக எமது காரைநகர் பிரதேசம் விளங்கிவருவது யாவரும் அறிந்ததே. எமது கிராம மக்களில் பெரும்பாலானவர்கள் பல துறைகளிலும் சிறந்து விளங்கி பலராலும் போற்றக்கூடிய வகையில் வாழ்ந்து வருவது எமது கிராமத்துக்குரிய தனிச்சிறப்பாகும். அந்தவகையில் கிழவன்காடு கலாமன்றம் என்ற அமைப்பு கிராமத்தில் தோன்றி கடந்த 4வருடங்களாக கலை வகுப்புகளையும் அறநெறிப்பாடசாலை வகுப்புகளையும் மாணவர்கள் மத்தியில் நடத்தி வருவதுடன் சமூக சேவைகளையும் செய்து பலரது நன்மதிப்பைப் பெற்று வருவதையிட்டு மிகுந்த பெருமகிழ்ச்சி அடைவதுடன் இன்றைய கலைவிழா வெகு சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிநிற்கிறேன்.

**திரு.ந.சோதிநாதன் (மன்றத் தலைவர்)**

# ஒத்துழைப்புக்கான அமெரிக்க நிலையத்தின் வெளிக்களப் பிரதிநிதி சுனாமிப் பாதிப்புகளை

## நேரடியாகப பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

ஒத்துழைப்பிற்கான அமெரிக்க நிலையத்தின் வெளிக்கள பிரதிநிதி பீட்கஸ்டலி கடந்த 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்பு ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து இச் சங்கங்கள எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் மற்றும் இத் தொழிற்சங்கங்களை நடத்துவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பாகவும் பார்வையிடடு பின் சுனாமியால பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும் நோக்குடனேயே தாம் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளதாக ஒத்துழைப்பிற்கான அமெரிக்க நிலையத்தின் வெளிக்களப் பிரதிநிதி பீட்கஸ்டலி தெரிவித்துள்ளார்.

இவர் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள மணற்காடு, மருதங்கேணிப் பிரதேசங்களுக்கு சென்று சுனாமியினுடைய பாதிப்புக்கள் தொடர்பாகவும் சுனாமியால்பாதிக்கபபட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரசசினைகள் தொடர்பாகவும் நேரடியாக ஆராய்ந்துள்ளார். (அ-19)



யாழ்.மாவட்டத்தில் உள்ள தொழிற்சங்கங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், தொழிற்சங்கங்களை நடத்துவதில் உள்ள சிக்கலகள தொடர்பாகவும் ஆராய்வதற்காகவே இவர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். இந்த வகையில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம, அஞ்சல் தொடர்பு ஊழியர் சங்கம், தொடர்பாக ஆராய்ந்ததோடு தொழிற்சங்கங்கள் யாவும் ஜனநாயக வழியில் செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

அத்துடன், அமெரிக்காவில் உள்ள தொழிற்சங்கங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான நிதியுதவியை வழங்குவதற்கு முன்வந்திருப்பதால், யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள்

# சிறைவாசம் செய்யும் சிறுவருக்கு நீர்கொழும்பில் தொழிற் பயிற்சி

(கொழும்பு)

பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்காக தண்டனை விதிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவிக்கும் இளம் பிராயத்தவர்களுக்கு தொழிற்பயிற்சியை வழங்கும விசேடதிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நீர்கொழும்பில் நிறுவப்பட்டுள்ள பயிற்சி நிறுவனத்தில் இப் பயிற்சிகள வழங்கப்படவிருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் குணரத்தின குருபு தெரிவத்துள்ளார். மூன்றுவருட காலப் பயிற்சியை நிறைவு செய்யும் சிறுவர், சிறுமியர்களுக்கு நிறுவனங்களில் தொழில்புரியும் வாய்ப்பும் கிடைக்கும்.

இவர்கள் விவசாயம், கால் நடை வளர்ப்பு, மோட்டார் தொழில்நுட்பம, தச்சு வேலை, மேசன்வேலை போன்ற துறைகளில் பயிற்றுவிக்கப்படுவார்கள்(அ-9)

# ஒஸ்ரியா பிரதிப் பிரதமர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயமொன்றைமேற்கொண்டுள்ள ஒஸ்ரியா பிரதிப் பிரதமர் கலாநிதி பேவேட்க்றோஜ் கடந்த வியாழக்கிழமை தென்பகுதிக்கு விஜயம் செய்தார்.

இவர் தனது விஜயத்தின் போது ஒஸ்ரியா அரசின் உதவியுடன் தென் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிட்டார். அம்பாலாங்கொட பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அவர் ஹிககடுவ பாடசாலைக்குச்சென்று பாடசாலை மாணவர்களின் சித்திரக் கண்காட்சி ஒன்றையும் பார்வையிட்டார்.

சுனாமி அனர்த்தத்தில் சேதமடைந்த கரையோர ரயில் பாதைகளின் புனரமைப்புக்கு ஒஸ்ரியா அரசாங்கம் நிதி உதவி வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (து-08)

# ஜயந்த தனபாலவுடன் க.கா. குழு சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை சமாதான செயலக பணிப்பாளர் ஜயந்த தனபாலவை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் வான்விங்கெல் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச் சந்திப்பின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்து ஒழுங்கு தொடர்பான விடயத்தில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் கூறிய கருத்துக்களை வான்லிங்கெல் எடுத்துரைத்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தளபதிகளுக்கு வான் வழிப் பயணங்களை ஒழுங்குசெய்து கொடுப்பதில் இராணுவத்தரப்பு தாமதம் வெளியிட்டு வருவதால் இந்த முரண்பாடான நிலை ஏற்பட்டுள்ளதாக யுதத நிறுத்தக் கண்காணிப்புக் குழுவன பேச்சாளர் ஜெலன் ஓல்வ் ரொட்டியர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கிளிநொச்சியில் கடந்தவியாழக்கிழமை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் விளக்கமளித்தார். படைத்தரப்பின் இந்த நடவடிக்கை காரணமாக கடந்தவார இறுதியில் தமது சில பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனையடுத்து இது தொடர்பாக நேற்றுக்காலை அரசாங்க சமாதான செயலர் ஜயந்த தனபாலவுடன் பேச்சு நடாத்தினோம். இந்த நிலையில் குறித்த பிணக்குகளுக்கான தீர்வினை ஓரிரு நாட்களில் எடுப்போம் என அவர் தெரிவித்தார். (ச-4)

# இராசி பலன்

**12.06.2005**
**(வைகாசி 29, ஞாயிற்றுக்கிழமை)**
**பஞ்சமி நண்பகல் 11.59 மணிவரை**
**ஆயிலியம் பிற்பகல் 5.13 மணிவரை**
**இராகுகாலம் 04.22- 05.52 மணிவரை**
**சுபநேரம் 08.52 -10.22 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | மனஞ்சஞ்சலம், மாதாசுகம், காரிய தாமதம், உடல்நலக்குறைவு. |
| இடபம் | கூட்டு முயற்சி, போசன நன்மை, பிரயாணம், நண்பர்கள் சந்திப்பு. |
| மிதுனம் | அதிகவார்த்தை, வேலைச்சுமை, எடுத்த காரியம்தாமதமாகும், போசனசுகக்குறைவு. |
| கடகம் | தெய்வசிந்தை, உறவினர் சந்திப்பு, நல்ல செய்தி, முயற்சி கைகூடும். |
| சிங்கம் | பிரயாணம், அமைதிக்குறைவு, தொழில் மந்தநிலை, பணவிரயம். |
| கன்னி | பெருமையடைதல், காரிய அனுகூலம், தன வருவாய், சகோதரர் உதவி. |
| துலாம் | அதிகாரம், நல்லவரவேற்பு, முயற்சி பலிதம், போசனசுகம். |
| விருச்சிகம் | புதிய திட்டமிடல், உடல்நலக்குறைவு, காரிய சிந்தை, பிரயாணம். |
| தனுசு | வீண் அச்சம், காரிய தடங்கல், பணவிரயம், ஆரோக்கியக்குறைவு. |
| மகரம் | கலந்துரையாடல், தொழில் வருமானம், காரிய சித்தி, அபூர்வ சந்திப்பு. |
| கும்பம் | தேகநலன், நல்ல தகவல், முயற்சி கைகூடும், போசனசுகம். |
| மீனம் | வியாபார நன்மை, உடல்நலக்குறைவு, கௌரவக்குறைவு, முயற்சி தாமதம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது**

**-வளவன்**

# பாலியாற்றுக்கு மேலாகப் பாலம்

(முல்லைத்தீவு)

மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவையும் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவையும் பிரிக்கும் எல்லைக் கோடான பாலியாற்றுக்கு மேல் பாலமொன்றை அமைத்துத் தருமாறு அப்பிரதேச மக்கள் நீண்டகாலமாக அரசாங்கத்தைக் கோரிவந்துள்ள போதிலும் இதுவரை அது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென அப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.

இப்பாலம் அமைக்கப்பட்டால் 16 கி.மீ. தூரத்தைக் கடந்து துணுக்காய் பிரதேசத்துக்குச் செல்லும் மக்கள 4.கீ.மீ. தூரத்தால் தங்கள் பிரயாணத்தை நிறைவு செய்யக கூடியதாக இருக்கும். கோடை காலத்தில் பாலியாற்றைக காலநடையாகக் கடந்து செல்லும் மக்கள் மாரிகாலத்தில் அவ் வாறறில் வெள்ளம் புரண்டோடுவதால் தங்கள் விவசாய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்காக மல்லாவி பிரதேசத்துக்குச் செல்ல முடியாத நிலையில கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள்.

ஆதலால் அப்பிரதேச மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக இலகுவாகப் பிரயாணம் செய்வதற்கேதுவாக பாலமொன்றை அமைத்துத்தர அரச சார்பற்ற அமைப்புக்களாவது முன்வரவேண்டுமென்றும் வேண்டுகிறார்கள். (து-128)

# உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவேன்

## ஜனாதிபதி சந்திரிகாவின் சூளுரை

ஜே.வி.பியின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் ஜனாதிபதி குமாரதுங்க தனது கட்சி அங்கத்தவர்களுடன் பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் கலந்துரையாடுவதெனத் தீர்மானித்துள்ளார்.

வடகிழக்குப் பிரதேசங்களில் இன்னமும் சுனாமி நிவாரணம் பகிர்ந்தளிக்கப்படுவது தாமதமாகிவருவது குறித்து ஜனாதிபதி பிரதமர் ராஜபக்ஷவை சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. பொதுக்கட்டமைப்புக்குப் பலத்த எதிர்ப்புத் தெரிவித்து வரும் ஜே.வி.பியின் தொடர்ச்சியான எதிர்ப்பு அறிக்கைகளின் மத்தியல் இச் சந்திப்புக்கள் நடைபெறவுள்ளது. பொதுச் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் தாம் அரசிலிருந்து பிரிந்து செல்லப்போவதாக ஜே.வி.பி அரசாங்கத்தை மிரட்டி வருகிறது. “எனது உயிருக்கு ஆபத்து ஏற்படடாலும் அதனை ஏற்படுத்தியே தீருவேன்” என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இது புலிகளை சமாதானப் பாதைக்கு இட்டுச் செல்லும் என ஜனாதிபதி தெரிவித்துள்ள வேளையில், இது புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்கள் தனிநாட்டைப் பெறுவதற்கே உதவும் என ஜே.வி.பி. கூறியுள்ளது. (து-6)

# சுருபச் சுற்றுப் பிரகாரம்

பருத்தித்துறை புனிதஅந்தோணியார் ஆலய சுருபச் சுற்றுப பிரகார விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இச் சுருபச் சுற்றுப் பிரகாரம் புனித அந்தோணியார் ஒழுங்கை, தும்பளை வீதி, 3 ஆம் குறுக்கு வீதி, 4 ஆம் குறுக்கு வீதியூடாக ஆலயத்தை வந்தடைந்து இரவு நற்கருணை வழிபாடும் நடைபெறும். மறுநாள் காலை 7.00 மணிக்கு திருவிழாத் திருப்பலி நடைபெற்று கொடி இறக்கத்துடன் நிறைவடையவுள்ளது. (து-104)

# அரச அலுவலர்களிடையே இலக்கியப் போட்டிகள்

(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்களுக்கிடையில் ஆக்கத்திறன் போட்டி ஒன்றை நடத்துவதற்கு கலாசார அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச உத்தியோகத்தர்களின் கலை இலக்கிய ஆற்றல்களை விருத்தி செய்து ஊக்குவிக்கும் நோக்குடன் இந்தப் போட்டிகள் நடத்தப்படுவதாக கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.எம்.விஜித்த ஹேரத் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

சிறுகதை, பாடல், கவிதை மற்றும் சிறுவர்கதை ஆகிய 4 துறைகளில் போட்டி நடத்தப்படவுள்ளது.

போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் சிறுகதைகள் ஆயிரத்து 500 சொறகளுக்கு உட்பட்டதாகவும் பாடல்கள் 3 நிமிடங்களை உடையதாகவும் அமைய வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் அரச உத்தியோகத்தர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் யூலை மாதம் 10 ஆம திகதிக்கு முன்னர் கலாசார அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ-9)

# கொத்தணி பஸ் கட்டணமும் அதிகரிப்பு

## மாணவருக்கான பருவகாலச் சீட்டுக்கு கழிவு

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணத்திற்கு இணையாக கொத்தணி பஸ்களினதும் கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக மததிய போக்குவரத்து சபை தெரிவிக்கின்றது.

கொத்தணி பஸ் வண்டிகளின் கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும் பாடசாலை மாணவர்களுக்கான பருவ காலச்சீட்டுக்கு உரிய கட்டணத்தில் 10 வீத கழிவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபையின் தலைவர் நிஹால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய பஸ் கட்டண மறுசீரமைப்பு தனியார் பஸ் வண்டிகளைப் போன்று கொத்தணி பஸ் நிறுவனங்களுக்கும் பொதுவானது என்று போக்குவரத்து அமைச்சு தெரிவிக்கின்றது.

ஆகக் குறைந்த கட்டணத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கலாநிதி ரீ.எஸ்.ஜெயவீர தெரிவித்தார்.

ஆகக்குறைந்த கட்டணமாக 4 ரூபா 50சதமாக அதிகரிக்க நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது தீர்மானிக்கப்பட்டது.

எனினும் இந்தக்கட்டண மறுசீரமைப்புக்கு அமைச்சரவையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

இது தொடர்பான அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை பத்திரமொன்று தாக்கல் செய்யப்படவுள்ளதாக ஜெயவீர மேலும் தெரிவித்தார். (அ-9)

**மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்**

- ✷ மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி
- ✷ சித்திரப் போட்டி
- ✷ புகைப்படப் போட்டி
- ✷ சிறுகதைப் போட்டி

**பெறுமதி மக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள்**

**விபரம் மிகவிரைவில் உங்கள் வலம்புரியில்.**

# புதளக் கடற்தட்டுகள் பிறழ்ச்சி! புகோளக் கடற்தளங்கள் நீட்சி!

**2** தொடர்ச்சி..


ஆர்கான் ஏகமூலங்கள் **(Ar-Ar39 Dating)** ருபீடியம், ஸ்டிராஞ்சியம் கதிரியக்கத் தேய்வு காலத்தை **(Rubibi um-Strontium (Rb-Sr) Dating)** ஆராய்ந்து, சுமாத்திரா குன்றுகளின் கருங்கல் மாதிரிகளின் வயதைக் காண முடிந்தது. கருங்கற்கள் 5.5 முதல் 192 மில்லியன் ஆண்டு வயதுகளைக் கொண்டிருந்தன. **(Sulit Granite: 192Ma) (Lassi Pluton:52 Ma), (Lolo 12 Ma), (Sungaipenuhgra nite : 5.5 Ma) (Ma (Million Years Ago))** சுமாத்திரா பாறைகளில் காந்தசக்தி ஜுஜீ ராஸிக் யுகத்தின் **(Jurassic Era)** ஆரம்பத்தில் சுமார் **(193-15 Ma)** மில்லியன் ஆண்டுகளுக்கு இடையிடையே ஏற்பட்

> “இதுவரை சுற்றி வந்துள்ள பு,கோளம் இன்றும் ஓடிக் கொண்டு வருவதுடன், இனியும் தொடர்ந்து சுற்றப் போகும் ஒரு பு,தயந்திரம்! உலகக் கண்டங்கள் படிப்படியாக நில அரிப்பில் சரிக்கப்பட்டு, அவற்றின் கழிவுத் தளங்கள் நீரால் வழித்துக் கடலுள் தள்ளப்பட்டு, உட்கரு வெப் பத்தால் அவை மீண்டும் உயர்ந்தப்பட்டுப் பிறழ்கின் றன! இம் மாதிரி, பு,மியில் நில அரிப்பும், நிலப்புடைப்பும் **(Erosion & Uplift)** மாறி மாறி மீள்சுற்றில் நிகழ்கின்றன”

டுள்ளது என்பதும் அறியப்பட்டது.

## கண்டத்தீவுகளுக்கும் கடற் தீவுகளுக்கும் உள்ள வேறுபாடுகள்

உலகிலே உண்டாகியிருக்கும் தீவுகளை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். 1.கண்டத் தீவுகள் 2. கடற் தீவுகள். **கண்டத்தீவுகள் (Conti nental Islan ds) என்றால் என்ன?** என்பதை முதலில் பார்ப்போம். பெருங் கண்டத்துடன் அதன் அருகே தணிந்த கடல் ஆழத்தில் தளப்பரப்பால் இணைக்கப்பட்ட தீவே கண்டத் தீவு என்று அழைக்கப்படுகிறது. இலங்கைத் தீவு உபகண்டமான இந்தியாவின் கண்டத்தீவு என்று சொல்லலாம்.




Major tectonic plates of the world.

கடந்த 20000 ஆண்டுகளில் பெருங்கண்டத்துடன் பிணைந்து கொண்ட தீவுகளே அப்பெயரைப் பெறுகின்றன. கண்டத்தீவுகளில் உள்ள சில செடி கொடிகள், உயிர் ஜந்துகள் **(Fauna $Flora, Species)** பெருங் கண்டத்தில் உள்ளவை போல் இருக்கின்றன. குறிப்பிட்ட இடத்தில் பிறந்து விருத்தியாகும் ஜந்துகள் **(Endemic Specief)** அங்கு இருப்பது அபு,ர்வம்தான்.

**கடற் தீவுகள் (Ocean Islands) என்றால் என்ன?** பு,மியின் உட்கருவிலிருந்து கடற்தளத்தில் துளையிட்டு எரிமலைகள் சீறி எழுந்து, கடல் ஆழத்தில் உண்டாக்கப்பட்ட தீவுகள் இப்பெயரால் அழைக்கப்படுகின்றன. ஹவாய் தீவுகள், ஐஸ்லாந்து தீவுகள் ஆகியவற்றை இவற்றுக்கு உதாரணமாகக் கூறலாம். கண்டங்களை ஒட்டாமல், கண்டங்களுக்கு அப்பால் உண்டானவை இத்தீவுகள் மைய அட்லாண்டிக் பிறழ்ச்சித் தட்டுக் கடற்பீடம் குறுக்கே செல்லும் ஐஸ்லாந்தில் உள்ள சூர்ட்ஸி **(Surtsey, Iceland)** என்னும் தீவு 1963 நவம்பர் 14 இல் வட அட்லாண்டிக் கடலில் எழுந்த எரிமலையால் புதிதாகத் தோன்றியது!


அத்தீவுகள் எப்போதும் ஒரு பெருங் கண்டத்துடன் பிணைக்கப்படுவதில்லை. செடி, கொடிகள், விலங்கினங்கள் கடல் வழியாகக் கொண்டு செல்லப்பட வேண்டும். கடல்மீது வந்த தாவர இனங்கள், விலங்கினங்கள் மட்டுமே அத்தீவுகளில் பிழைத்திருக்க முடியும். நிலப் புதுநீரில் வளரும் மீனினம் போன்ற பலதரப்பட்ட உயிர் ஜந்துகள் அந்தத் தீவுகளில் கிடையா. கண்டத்திற்கு அப்பாலிருக்கும் கடற்தீவுகளில் புத்தின ஜந்துகள் வளர்ச்சிக்கு மையமாக **(Centres of Speciation)** இருக்கின்றன. குறிப்பிட்ட இடவிருத்தி ஜந்துகள் **(Endemic Species)** வளர இத்தீவுப் பகுதிகளின் சூழ்நிலைகள் உதவுகின்றன.

## உலகக் கண்டங்களின் புலப் பெயர்ச்சி

*“நாமிருக்கும் கண்டங்கள், பு, மி என்னும் நர்த்தகத் தடாகத்தில் ஆமைபோல் நகர்ந்து செல்லும், தாமரை இலைகள்! துகிலுரிக்க முடியா தோலுடுத்திய வெங்காயக் கோளம்! கடல் வயிற்றில் கனலை மூட்டி எரிமலை சமைக்கும் கரிச்சட்டி வடைபோல் சிரம் நீட்டும் தீவுகள்! பு, கம்பம் உடல் குலுக்கி பு, தளம் பிரித்துப் பிழம்புக் குழம்பில் படகுபோல் கட்டுமரத்தை நெம்பித்தள்ளும்!”*

“பு, கோளத்தின் வெவ்வேறு ஆழத்திலிருந்தும், மேல் பரப்பிலிருந்தும் எடுக்கும் மாதிரிப் பாறைகளில் மிகச் சிறிதளவு காணப்படும் யுரோனியம், தோரியம் ஆகிய இயற்கை உலோகங்களின் மூலம், பு, மியின் வயது காலத்தைக் கணக்கிட முடிகிறது! சுயமாகத் தேயும் இந்த மூலகங்கள் முடிவில் நிலையாக மிஞ்சும் ஈயத்தின் எடையைச் கண்டு, அப்பாறை தோன்றிய காலத்தை அறிந்து கொள்ளலாம். சமீபத்தில் நுணுக்கமான முறைகளைக் கையாண்டு பாறை மாதிரிகளில் எஞ்சிய ஈயத்தின் அளவைக் கணக்கிட்டு நமக்குக் கிடைத்த பு, ர்வீகப் பாறையின் உச்சக்காலத் தோற்றப் சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகளாக அறியப்படுகிறது!” ரஷ்ய அமெரிக்க விஞ்ஞானி ஜார்ஜ் காமாவ் (1904-1968)

“இதுவரை சுற்றி வந்துள்ள பு, கோளம் இன்றும் ஓடிக் கொண்டு வருவதுடன், இனியும் தொடர்ந்து சுழரப்போகும் ஒரு பு,தயந்திரம்! உலகக் கண்டங்கள் படிப்படியாக நில அரிப்பில் சரிக்கப்பட்டு, அவற்றின் கழிவுத் தளங்கள் நீரால் வழித்துக் கடலுள் தள்ளப்பட்டு, கடல் மடியில் அடுக்குப் புழுதியாய் படிகின்றன. கழிவுப் புழுதி கள் கடினமாகி, பு,மியின் உட்கரு வெப்பத் தால் அவை மீண்டும் உயர்த தப்பட்டுப் பிறழ்கின்றன! இம்மாதிரிப் பு,மியில் நில அரிப்பும், நிலப்புடைப்பும் **(Erosio & UPlift)** மாறிமாறி மீள்சுற்றில் நிகழ்கின் றன”




“பு, மியின் நிலப் பரப்புப் பகுதிகள் அனைத்தும் பல்லாண்டுகளுக்கு முன்பு ஒருங்கிணைந்த மாபெரும் ஓர் ஒற்றைக் கண்ட மாக இருந்தது! பல மில்லியன் ஆண்டு கள் கழித்து, எப்படியோ அப் பெருங் கண் டம் உடைபட்டு, வெவ்வேறு பகுதிகளாகப் பிரிந்து மெதுவாக நகர்ந்து, தற்போதுள்ள இடங்களுக்கு அவை நிலப்பெயர்ச்சி ஆகியுள்ளன!”

பு,கோளத்தின் அடித்தட்டு **(Crust)** உட்கருக் கனல் குழம்பில் **(Liquid Co re)** மெதுவாகப் பெயர்ச்சி அடைகிறது! கண்டங்களின் நிலப்பெயர்ச்சி நியதிக்கும் அடித்தட்டுப் பிறழ்ச்சி நிகழ்ச்சிக்கும் **(Con tinental Drift & Plate Tecto nics)** பு,ர்வப் படிவப் பதிவுகள் **(Fossil Recor ds)** சான்றுகளும் உறுதியும் அளிக்கின்றன” - டாக்டர் ஆல்பிரெட் வெஜினர்,

ஜெர்மன் பு,தளவாதி **(Dr. Alfred Wegener (1880-1930))**

“பு,கோளப் பிறழ்ச்சித் தட்டு நியதி **(Thory of Plate Tectonics)** என்பது வெறும் கோட்பாடாக மட்டும் குறிப்பிடப்படாது! டார்வின் உயிர் மலர்ச்சிக் கோட்பாடு **(Evol utionary Theory)** ஐன்ஸ்டைன் ஒப்பியல் நியதி **(Theory of Relativity)** ஆகியவற்றைப் போல் விஞ்ஞான மகத்துவமும் முக்கியத்துவமும் பெற்றது! டாக்டர் மௌரிஸ் யு,விங், அதிபர், அமெரிக்கன் கடற்தளவியல்சி கூடம் **(Dr. Maurice Ewing. Dean of amercan Oceanogr apers (1906-1974)**

பிரபஞ்சத்தில் ஆடாமல், அசையாமல், ஓடாமல், நகராமல், சுழலாமல் முடத்துவ நிலையில் உள்ள அண்டங்களோ அல்லது அகிலக் கோள்களோ எவையும் இருப்பதாகத் தெரியவில்லை. பரிதியைச் சுற்றி வந்து, தன்னைத் தானே தன்னச்சில் சுழலும் நமது புளோகத்தின் தளப்பரப்பு இயக்கமற்று நிலையாக இருப்பது போல் தோன்றுவது மெய்யான தோற்றமில்லை!. பு,மியின் தளப் பகுதி நிலையானது என்னும் பு,ர்வீகக் கொள்கைக்குச் சவால் விட்டு, விஞ்ஞான உலகில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கியிருக்கிறது! பு,தள வரலாற்றின் 4.6 பில்லியன் ஆண்டுகளில் ஊதுலை இசைச் கருவி ஏறி இறங்குவது போல் **(Accor dion)** கடல்கள் திறந்து நிரம்புவதும் மூடியடங்குவதும் தெரியப்பட்டன! கொதிக்கும் கடலில் மூழ்கிய படகைத் தள்ளுவது போல் கண்டங்கள் நகர்த்தப்பட்டன என்னும் புதிய கருத்துகள் நிலவ ஆரம்பித்தன! உலகக் கண்டங்கள், கடல்கள், குன்றுகள், தீவுகள் எப்படி உண்டாயின? எரிமலைகள், நிலஅதிர்வுகள் ஏன் ஏற்படுகின்றன? கடலடியே மலர்ந்து வரும் பு,ர்வப்படிவங்கள் **(Marine Fossils)** எப்படி இமயமலைச் சிகரத்தில் காணப் படுகின்றன? இவை போன்ற குழப்பமான, விடை தெரியாத புதிர் வினாக்களுக்குப் பதிலளிக்கப் புரட்சிகரமான கருத்துகளைப் பு,தாளத்தட்டு புதுநியதி விளக்குகிறது!

## பு,தள விஞ்ஞானத்தில் புரட்சிகரமான கண்டுபிடிப்புகள்!

ஒரு காலத்தில் மாறாமல் நிலையாக இருப்பதாகக் கருதிய உலகக் கண்டங்கள் உண்மையில் மிக மெதுவாக நகர்கின்றன என்பது சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது! பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னே உலகம் உண்டான காலத்தில் ஒரு

**இணையப் பார்வை**

பெருங்கண்டமாக இருந்து, பல பில்லியன் ஆண்டுகளாக மிகமெதுவாகப் பெயர்ச்சி அடைந்து பல கண்டங்களாகப் பிரிந்து போயின என்னும் கோட்பாடை முதலில் விஞ்ஞானிகள் ஒப்புக்கொள்ளவில்லை! கி.பி.1620 இல் இங்கிலாந்தில் விஞ்ஞான ஆராய்ச்சி ஆர்வத்தை முதலில் தூண்டிய பிரிட்டிஷ் வேதாந்தஞானி பிரான்ஸிஸ் பேகன் 1561-1626 அமெரிக்காவின் மேற்குக் கடற்கரைப் பகுதியும் தென்னமெரிக்காவின் கிழக்குக் கடற்கரைப்பகுதியும் ஒன்றுடன் ஒன்று பொருந்தி அமையும் வடிவத்தில் உள்ளனவென்று கண்டறிந்தார்!

முன்னூறு ஆண்டுகளுக்குப் பிறகு அக்கருத்தை வலியுறுத்தி 1912 இல் ஜெர்மன் பு,தளவாதி ஆல்பிரெட் வெஜினர் பு,மி ஒரு காலத்தில் மாபெரும் ஒற்றைக் கண்டமாக இருந்தது என்பதற்குப் பு,ர்வப்படிவ ஆதாரங்கள் **(Fossil Examples)** காட்டி ஒரு புதுக்கோட்பாட்டை உருவாக்கி நிலை நாட்டினார்.

சிறிய கண்டமாகத் தோன்றினாலும் ஆசியாவின் பரந்த தளப்பகுதியில் ஒரு கண்டமான இந்தியா தனித்துவத் தலை தூக்கிய ஓர் பிறழ்ச்சித் தட்டாக **(Tectonic Pla te)** கருதப்படுகிறது. அத்தட்டு இந்திய - அவுஸ்திரேலியத் தட்டென்று பெயரிடப்பட்டது. இந்திய அவுஸ்திரேலியத் தட்டின் முனை, யு,ரேசியத் தட்டை நெருக்கி இரண்டு தட்டுகளின் இடைப்பட்ட அழுத்தம் பல மில்லியன் ஆண்டுகளாகப்படிப்படியாக உலகச் சிகரத்தில் உயர்ந்ததைக் கொண்ட இமயமலைத் தொடரை வளர வைத்து இன்னும் பல மில்லியன் ஆண்டுகளுக்கு உயர்த்திக் கொண்டே போகும். பு, கோளக் கணடங்களின் நிலத்தட்டுகள் இடப் பெயர்ச்சி ஆவதைத் தற்போது அண்ட வெளியில் சுற்றிவரும் விண்சிமிழ்கள் **(Satellites)** துள்ளியமாகத் தொடர்ந்து கணக்கெடுத்து வருகின்றன.!

*(தொடரும்)*

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 19

''சட்டசபையைப் பொறுத்தவரையில் வடக்குக்கிழக்கு
மாகாணங்களின் மக்களுக்கும், மேல்மாகாண
இலங்கைத் தமிழருக்கும் கொடுக்கப்படும்
பிரதிநிதித்துவமும், இலங்கையின் ஏனைய பாகங்களுக்குக்
கொடுக்கப்படும் பிரதிநிதித்துவமும், வருங்காலத்தில்
வகுக்கப்படும் அரசமைப்புச் சட்டத்தில் ஒன்றுக்கு இரண்டு
என்ற விகிதாசார அடிப்படையில் இப்பொழுது இருப்பது
போல அமைந்திருக்க வேண்டும்''

என்பதாக உடன்பாடு ஏற்பட்ட போதிலும்கூட, 1926இல் காலியில் நடந்த கூட்டமொன்றில் சிங்களத் தலைவர்களால் பின்தள்ளப்பட்டு, கருத்து வேற்றுமைகளை ஏற்படுத்தி, ஈற்றில் தமிழர்களது நம்பிக்கையைச் சிதறடிக்கும் வண்ணம் இந்த ஒப்பந்தமும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது.

இலங்கையில் இனரீதியான சிந்தனைகள் வலுப்பெறவும், இனக்குரோதங்கள் மலிவுறவும், இலங்கையின் தேசிய ஐக்கியத்துக்கு அதிக அளவு தாக்கத்தைக் கொணர்விக்கவும் காரணமாயிருந்த ''சிங்களம் மட்டும்'' அரசகரும மொழிச்சட்டமானது பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்ட பின்னர், கிளர்ந்தெழுந்த தமிழ்பேசும் மக்களது இனவுணர்வுகளைச் சமாளிக்கும் விதத்தில், 1957ஆம் ஆண்டு யூலை மாதம் 27ஆம் திகதி பிரதம மந்திரியின் அலுவலகத்தில் வைத்து அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்களுக்கும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களுக்கும் இடையில் பண்டா-செல்வா ஒப்பந்தம் உருவானது. ''தமிழை ஒரு தேசிய சிறுபான்மையினத்தின் மொழியாக அங்கீகரிக்கவும், அரச கருமச்சட்டத்தை ஊறுபடுத்தாத விதத்தல் வட கிழக்கின் நிர்வாகத்தில் பயன்படுத்தவும் வடமாகாணத்திற்கு ஒன்றும் கிழக்கு மாகாணத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மூன்று வரையிலானதுமான பிரதேச சபைகளை அழிக்கவும் அப் பிரதேசசபைகள் மாகாண எல்லைக்கப்பாலும் இணைந்து செயற்படவும் இவ் ஒப்பந்தம் வசதிகளை அழித்தது. மேலும் சமூக நலம் சார்ந்த அபிவிருத்தி துறைகளுடன் காணி, காணிக் குடியமர்வு, குடியேற்றம் போன்றவற்றிலும் அதிகாரம் பெற வழி வகுத்தது. அத்துடன் பிரதானமாகக் குடியேற்றத்திட்டங்களில், கல்லோயா அபிவிருத்திச் சபையின் நிர்வாகப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய இடங்களில் வடகிழக்கு மாகாண மக்களுக்கும் மற்றும் தமிழ் பேசும் மக்களுக்கும் முதன்மையளித்ததுடன், தீர்க்கப்படாதுள்ள பிரச்சினைகளில் பேச்சுவார்த்தை மூலம் இணக்கம் காணவும் இடமளித்தது. இந்த ஒப்பந்தமும், வழமை போலவே பேரினவாத எதிர்ப்பைச் சம்பாதித்தது. உணர்வுநிலை நின்ற அரசியல்வாதிகளும், பௌத்த பிக்குகளும் கடும் போராட்டங்களை நடத்தினர். ஜே.ஆர். ஜெயவர்த்தனா, கே.எம்.பி.இராஜரத்தினா போன்றவர்கள் 'கண்டியாத்திரை' நடத்தி மக்களைத் தூண்டிவிட்டனர். இதனால் அரசியல் நெருக்கடிக்காளான பண்டாரநாயக்க அவர்கள், தாமே தயாரித்த ஒப்பந்தத்தை 1958 ஏப்ரலில் கிழித்தெறிய நேரிட்டது. தமிழ் பேசும் மக்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தியாக்காது போயினும், ஓரளவுக்காவது, இன்றைய நிலைமைக்கு இனக்குமுறல்கள் வளர்ச்சியடைவதைத் தடுத்திருக்கக்கூடியதும், இதுவரை உருவாக்கப் பெற்ற தமிழர்-சிங்களவர் சம்பந்தமான ஒப்பந்தங்களில் தரங்கூடியதென அரசியல் அறிஞர்களால் கணிக்கப் பெற்றதுமான இவ்வொப்பந்தம் நிறைவேறாது போனமை துரதிஷ்டவசமானது ஆகும். இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்திற்கும் 1961 இன் நீதியமைச்சராயிருந்த சாம்.பி.சி. பெர்னாண்டோவுக்குமிடையில் 5.4.1961இல் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தமும் குறிப்பிடக் கூடிய ஒன்றாகும். வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாகமொழி, நீதிமன்ற மொழி சம்பந்தமான சில உடன்பாடுகள் இதில் ஏற்பட்டன. அத்துடன் வடகிழக்குக்கு வெளியேயுள்ள தமிழர்களின் உரிமைகள் பற்றியும், 1956க்கு முன்னர் அரச சேவையில் சேர்ந்த ஆனால், 1.1.61 முதல் ஐந்து ஆண்டுக்ளுக்குள் சிங்களத்தில் தேர்ச்சி பெறத் தவறிய தமிழ் அரச ஊழியர்க்கும் அதிகாரிகட்கும் நஷ்டஈட்டுடன் இளைப்பாறும் உரிமை பற்றியும் மேலும் இணக்கம் காணப்பட்டது. இவ் ஒப்பந்த அமுல்களும் நத்தை வேகத்திலும், ''பழைய குருடி கதவைத்திறவடி'' என்ற பாங்கிலுமேயே நடைபெற்று வந்தன.

இலங்கை அரசாங்கத்தினால் 1948,1949ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட இரு குடியுரிமைச் சட்டங்களின் விளைவாக இலங்கையிலுள்ள இந்தியத் தமிழர்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டும், சமூக அந்தஸ்து குறைக்கப்பட்டும், அவர்களை ''நாடற்றவர்'' என்ற ரீதியில், இலங்கை இந்திய அரசுகள் பேசித் தீர்த்து ஓர் முடிவினை மேற்கொள்ள வேண்டிய அவலநிலை உருவானது.

''அத்துமீறிய சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் ஆளாகும்
தோட்டத் தொழிலாளருக்கு எதிராக முதலாளித்துவ
நலன்கொண்ட ஏனைய இனக்குழுக்களின் ஆதரவுடன்
சட்டங்களை நிறைவேற்றினர்''

என குமாரி ஜெயவர்த்தனா அவர்கள் தமது நூலொன்றில் எடுத்துக் கூறுகின்றமை இந்த மக்களின் சோக வரலாற்றைப் புலப்படுத்திக் காட்டவல்லது.

நாடற்றவராக்கப்பட்ட இந்திய வம்சாவழித் தமிழர்கன் சம்பந்தமாக இலங்கை-இந்திய ஆட்சியாளர்களிடையே 1954, 1964, 1974ஆம் ஆண்டுகளில் மூன்று ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின. இவை நேரடியாகத் தமிழர்-சிங்களவர் ஒப்பந்தமாயில்லாது விடினும், பெரும்பான்மை இனத்தவர்கள், சிறுபான்மையோருக்குக் காட்டுகின்ற சுயநலங் கலந்த போக்கினையும், இந்த நாட்டின் உயர்வுக்காக உழைத்தவர்களிலனேகரை நாடு கடத்துவதில் காட்டுகின்ற அவசரத்தையும் அறியவாவது முடிகிறது. இத்தகைய ஒப்பந்தங்களினால் பாதிக்கப்படுபவர்கள் இந்தியத் தமிழரும், இலங்கையின் தமிழ்பேசும் மக்களுமேயாவர். 1954ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் செய்துகொள்ளப்பட்ட நேரு- கொத்தலாவலை ஒப்பந்தமானது, இரண்டு வருடகாலத்தினுள் இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டத்தின்படி பிரசைகளைப் பதிவு செய்யவும், பத்து வருடங்களுக்குத் தனியானதோர் வாக்காளர் இடாப்பு பேணப்படவும், இலங்கைப் பிரசைகளாகப் பதிவுசெய்யப்படாதவர்கள், இந்தியப் பிரசாவுரிமைக்கு விண்ணப்பிக்கும்படி தூண்டப்படவும் வகைசெய்தது. இந்த ஒப்பந்தத்தின் மூலமாக எதிர்பார்த்த விழுமியங்கள் கிடைக்கப்பெறாமையினாலும், பல்வேறு ஆலோசனைகளின டிப்படையிலும் 1964ஆம் ஆண்டு சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. இலங்கையில், குடியுரிமையற்றோரின் எண்ணிக்கையானது 9,75,000 ஆகக் கணிக்கப் பெற்று, அதனுள் $5^1/_4$ இலட்சம் பேருக்கு இந்தியக் குடியுரிமையும், மூன்று இலட்சம் பேருக்கு இலங்கைக்குடியுரிமையும் மீதி $1^1/_2$ இலட்சம் பேர்பற்றிப் பிறிதோர் தருணத்தில் பேசித்தீர்வு காண்பதெனவும் முடிவுசெய்து இவ்வொப்பந்தமும் செய்யப்பட்டது.

இறுதியாக 1974ஆம் ஆண்டில் செய்யப்பட்ட இந்திரா-சிறிமாவோ ஒப்பந்தமானது, முன்னைய ஒப்பந்தப்படி தீர்வு செய்யப்படாமல் இருந்த $1^1/_2$இலட்சம் பேரையும், அவர்களது இயற்கையதிகரிப்பையும் சமமாகப் பங்கீடு செய்வதெனத் தீர்மானித்தது. முன்னைய ஒப்பந்தமானது 15வருட நிறைவேற்றுக்கால எல்லையைக் கொண்டிருந்த போதிலும், பல்வேறு பிரச்சினைகளை அது எதிர்கொள்ளவே செய்தது.

(தொடரும்)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாக பூசணி அம்மன் பாமாலை

### ஐந்தாம் திருவிழா



### ''நயினையிலே திருஉலா''

''நயினையிலே குடிகொண்டாள் நாகேஸ்வரி
நாளும் எமைக் காத்திடுவாள் நாகேஸ்வரி
நாகம் குடைபிடிக்க அன்னை நாகேஸ்வரி
நாடிநின்றாள் அலைகடலில் நாகேஸ்வரி
நாடித்தனைத் துதிப்போர்க்கு நாகேஸ்வரி
நற்பலன்கள் பல தருவாள் நாகேஸ்வரி
நாள்தோறும் நயினை மண்ணில் நாகேஸ்வரி
நாம்கண்டிட திருஉலா வருகிறாள் நாகேஸ்வரி

வி.ரவிமோகன்

### அன்னையாய் அருகிருந்து காத்திடம்மா

சர்ப்பமாய் எழுந்த நாகதேவி-தமிழர்
சரித்திரத்தை காத்திடம்மா நாகதேவி
அர்ப்பணித்தோம் எமையெல்லாம் நாகதேவி
அரவணைத்து தமிழினத்தை காத்திடம்மா
பூர்வீகமாய் உனை நம்பினோம் நாகதேவி
புதுமைகளை தந்தெம்மை காத்திடம்மா
ஆரொடு இனி நோவோம் நாகதேவி
அன்னையாய் அருகிருந்து காத்திடம்மா

அருளனுசியா

### யாவர்க்கும் அருள்புரியும் நல்லாள்

புனலாகி எல்லையில் விண்ணாய் — எங்கும்
பொருந்தியுள காற்றாகி, விரிகின்ற மண்ணாய்
கனலாகி நீக்கமற நின்று — எம்மைக்
காக்கின்ற சக்திலும் சக்திலும் என்று
அணி நயினை...

யாவர்க்கும் அருள்புரியும் நல்லாள் — அவள்
அசுரனோ டமராடி உலகோம்பும் வல்லாள் தேவர்க்கும்
மேலான தேவி — அவள்
திருவடியில் நறுமலர்கள் அன்போடு தூவி
அணி நயினை...

சாதிமத நிறபேதம் போக்கி — கொடிய
சமராடும் மனநிலையைச் சகமீதில் நீக்கி
நீதியோடு மனிதகுலம் வாழ — நாங்கள்
நேர்வழியில் எங்களை நாங்களே ஆள
அணி நயினை...

அந்தரீ கௌரிகா மாட்சி — சக்தி
அபிராமி சாமுண்டி உமைவிசா லாட்சி
சுந்தரீ சிவகாம வல்லி — தாயே
சொர்க்க நாயகிநீயே துணையென்று சொல்லி
அணி நயினை...

தனங்கிளப்பு வ.சின்னப்பா

# இன்று ஒரு தகவல்

## ஆசையும் துன்பமும்

"அன்று ஆசைப்பட்டேன் இன்று அவஸ்தைப் படுகிறேன்' நினைப்பு ஒருவருக்கு வந்தால்" ஆசாமி தேறிவருகிறார். என்று பொருள் ஆசைதான் துன்பத்திற்குக் காரணம் என்ற ஒரு பெரிய உண்மை அவருக்குப் புரிய ஆரம்பித்துவிட்டது. என்று தானே அர்த்தம்.

ஒரு ஆள் ஆசாளக் கொல்லையில் காவல் காத்துக் கொண்டிருந்தபான் வழக்கமாக சோளக் கொல்லையில் ஒரு பொம்மையை வைத்து காவல் காப்பதுண்டு "பொம்மை எதற்கு? சானே போய் அங்கே இருப்போமே என்று நினைத்தான் போனவனந் கவனமாக இருந்து விட்டான். உஙக்கமம் வரவே உறங்கிவிட்டான்.

அந்த நேரம் பார்த்து அந்தக் கொல்லையில் மேய்வதற்கு நற்தி ஒக்று வந்தது எங்கிருந்து? கைலாயத்திலிருந்து சிவமெருமானிடம் உள்ள நந்தி பூலோக சோளத்தில் அதற்கு அப்படி ஒரு ஆசை வந்தது. இஷ்டத்திற்கு மேய ஆரம்பித்துவிட்டது. இவனுக்கு திடீரென விழிப்பு வந்து விட்டது. நற்தியை விரட்டிப் படிக்க கிட்டே ஓடினான் நந்தி விருட்மெடன்ற ஆகாயத்தில் பறந்து போய் விட்டது. ஆகா ஏமாற்து போய்விட்டோமோ! என்று நினைத்தான் "சரி... இது மீண்டும் இங்கே வரும் அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தான்.

மறுநாள் துங்குவது போல் பாவனை செய்துகொண்டு கிடந்தான் அவன் எதிர்பார்த்தது. போலவே நந்தி வந்தது. இவன் மெது வாக பாம்பு மாதிரி நெளிந்து நெளிந்து கொண்டே போனான் அருகில் போனதும் நந்தி இவனைப் பார்த்து விட்டது விருட்டென்று மேலே கிளம்பியது இவன் ஒரே தாவாகத் தாவி அதன் வாலைப் பிடித்துக்கொண்டான்.

நந்தி பறந்து .செல்ல இவன் தொங்கிக்கொண்டே செல்கிறான். நேராக கைலாயத்திற்குப் போய் சேர்ந்தான். பார்வதி பரமசிவனைப் பார்த்தார். "உங்கள் நந்தி எனது சோளக் கொலலையை அழித்து எனக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டதே இது நியாயமா?" என்று கேட்டான். நியாயமில்லை என்று அவர்கள் ஒத்துக்கொண்டு நஷ்டஈடாக ஒரு பைநிறைய தங்கக் கட்டிகளைப் போட்டு அவனிடம் கொடுத்தான். வாங்கிக் கொண்டான். திரும்பிவந்தான்.

திரும்பிவந்தவன் தங்கத்தைக் கொண்டு சந்தோஷமாக வாழ வேண்டியது தானே! அதை விட்டு விட்டான். இவ்வளவு தாராளமாக தங்கத்தை அள்ளிக் கொடுத்தார்களே! அது உண்மையிலேயே தங்கம்தானா இல்லை வேறு ஏதாவதா? என்று சந்தேகம் வந்து விட்டது அவனுக்கு. இவன் மனிதன்தானே இயல்பாகவரக்கூடிய சந்தேகம். இங்கேயே யாராவது கொஞ்சம் தாராளமாக தர்மம் செய்தால் நாம் அவன் செய்த செயலைப் பாராட்டுவதில்லை. இப்படி அள்ளி வீசுகிறானே. அவன் எங்கே கொள்ளையடித்திருப்பான் என்ற சந்தேகம் நமக்கு வரும் . அப்படித்தான் அவனும் நினைத்தான்.

தங்கக் கட்டியை எடுத்துக்கொண்டு தனது நண்பன் ஒருவனிடம் சென்றான். அவன் இது சம்பந்தமான விபரம் தெரிந்தவன். தங்க நகை வியாபாரம் செய்பவன். "இது உண்மையான தங்கம்தானா என்று பார்த்துச் சொல்" என்றான் அவன் சோதித்துப் பார்த்தான். உண்மையான தங்கம்தான் என்பதை அவன் புரிந்த கொண்டான். இருந்தாலும் அந்த உண்மை இவனிடம் கூறவிலலை "இது தங்கம் இல்லை பித்தளை இப்படி உன்னை ஏமாற்றி யார்? என்று கேட்டான் மிகவும் தந்திரமாக இவன் அப்பாவித்தனமாக விபரத்தைச் செலன்னான் சரி என்று அவன் போய் விட்டான் மறுபடியும் கடவுளிடம் போய் இது நியாயமா? என்று கேட்பதென்று முடிவு செய்து விட்டான்.

அன்றிரவும் நந்தி வழக்கம் போல் மேய வந்தது. இவன் ஓடிப்போய் அதன் வாலைப்பிடித்துக்கொண்டான். நந்தி பறக்க ஆரம்பித்தது. இவன் வாலைப்படித்துக்கொண்டு தொங்குகிறான். காலில் ஏதோ கப்பென்று பிடித்தமாதிரித் தெரிந்தது. அவனுக்கு குனிந்து பார்த்தான் பார்த்தால் அவனது நண்பன் இவரை காலைப் பிடித்து தொங்கிக் கொண்டுவருகிறான் அவனுக்கும் ஆசை வந்து விட்டது. அது தான் தந்திரமாக இப்படிச் செய்திருக்கிறான்.

நடுவானில் நந்திபோய்க்கொண்டிருக்கிறது. காலைப் பிடித்துக்கொண்டிருந்தவன் வாலைப்பிடித்துக் கொண்டிருந்த வனைப் பார்த்துக் கேட்டான் அது சரி உனக்கு எவ்வளவு தங்கம் தந்தார்கள்?" என்று கேட்டான். வாலைப்பிடித்திருந்தவன் இதோ இவ்வளவு இருக்கும் " என்று இரண்டு கைகளையும் விரித்துக் காட்டினான். அவ்வளவுதான் அவர்கள் இருவரும் மிக வேகமாக பூலோகத்துக்கு வர ஆரம்பித்துவிட்டனர். நந்தி மேலே போய் விட்டது இவர்கள் பொத் என்று வந்து விழுந்தனர்.

இந்தக் கதை என்ன நீதிக் கதையைக் சொல்கிறது என்றால் வாலைப்பிடித்தவன் உண்மையைச் சந்தேகப் பட்டான். காலைப்பிடித்தவன் போரசைப் பட்டான். உண்மையைச் சந்தேகப் படுபவர்களுக்கும் பேராசைப் படுபவர்களுக்கும் இது தான் கதி என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

"எனக்குப் பேராசையே கிடையாது" என்றார் ஒரு பெண்மணி "அது எப்படி?" என்று கேட்டேன் "ஒரு நாள் என் கணவா் எனது மோதிரத்தை விழுங்கி விட்டார். அதற்காக நான் கொஞ் சம் கூடக கவலைப் படவில்லை " என்றார் எனக்கு மிகவும் ஆச் சரியமாக இருந்தது, "அப்படியா?" என்றேனக் ஆமாம்! அது பித்தளை மோதிரம்" என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழருக்கான தீர்வு இழுத்தடிக்கப்படுமானால் தனிநாடு அமைவது தவிர்க்கமுடியாதது

## -யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

சிங்களப்பேரின வாதம் தனது இனவாதப் போக்கை நிறுத்தி தமிழர்களுக்கு உரிமைகளை வழங்க உடனடியாக முன்வர வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

இது விடயம் குறித்து ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்,

சிங்களப் பேரினவாத சக்திகள், தமிழ் மக்களுக்கு எந்த வகையான உரிமைகளும் கிடைத்துவிடக் கூடாது என பதில் முனைப்பாகச் செயற்படுகின்றது என்பது, இன்றைய அரசியல கள நிலைபரம் தெளிவாக எடுத்துக் கூட்டுகின்றது.

இதனை சுனாமி இயற்கை கடல் கோள் அனர்த்த மீள் கட்டுமானப் பணிக்காக உருவாக்க உத்தேசித்திருககும் பொதுக்கட்டமைப்பு எனும் நிவாரணப் பணிக்கான அமைப்பினைச் கூட தமிழ் மக்களுடன் இணைந்து மேற்கொள்ளக் கூடாது என்று, அதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்துக் கொண்டிருக்கும் இனவாதக் கட்சியான ஜே.வி. பி.இனதும் மத வெறிபிடித்தபிக்குமாரின் சிஹல உறுமய கட்சியானதும் போக்குத் தெளிவாக காட்டுகின்றது.

சிங்கள அரசினைப் பொறுத்தவரையில், காலத்துக்காலம் ஆட்சிப் பீடம் ஏறும் ஆட்சியாளர்கள் மாறுகின்றார்களே தவிர, அவர்களது இனவாத போக்கில் எந்த விதமான மாற்றமும் ஏற்படவில்லை.

தந்தை செல்வா தொடக்கம் பல்வேறு தமிழ் தலைவர்கள் தமிழர்களின் உரிமைக்காக, உரிமையினைக் கேட்கின்ற வேளைகளில், எவ்வாறு அதனைத்தட்டிக் கழித்ததோ அதேபாணியில்தான் இன்றும் சிங்களப் பேரினவாத அரசாங்கம் இழுத்தடித்துக் கொண்டு ஏமாற்றுவித்தைகளைத் காட்டிக் கொண்டிருக்கின்றது.

ஆனால், இன்று தமிழர்கள், தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற தமிழர் படையுடன் பலமான நிலையில் தான் தமது உரிமையினை கேட்டு நிற்கின்றார்கள்.

எனவே, இனியும், சிங்கள தேசம் தமிழர்களின் உரிமைகளை கொடுக்க இழுத்தடிக்குமாக இருந்தால், தமிழர்களுக்கு இருக்கும் ஒரேவழி பிரிந்து சென்று தனி நாடு அமைப்பது ஒன்றுதான் என்பதனை சிங்கள தேசம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழர்களுக்கு அரசியல் ரீதியாக தீர்வினைக் கொடுப்பதற்கு சிங்கள அரசியல் கட்சிகள் தடையாக இருக்குமானால், மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கும் அவையே காரணமாக இருக்கும் என்பதனை சர்வதேச நாடுகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்காவின் அரச தலைவி முன்னெடுக்கப் போகும் அடுத்த கட்ட நடவடிக்கையே, தமிழர்களின் அடுத்த கட்ட போக்கினை நிர்ணயிக்கும் என்பது இன்றைய அரசியல் யதார்த்தமாகும்.

பொறுமையின் எல்லையில், தமது உரிமைக் காக காத்திருக்கும், தமிழர்களை இனியும் பல இழுத்தடிப்புக்களை மேற்கொண்டு, ஏமாற்று நாடகங்களை சிங்கள அரசாங்கம் அரங்கேற்ற நினைக்குமானால் மோசமான விளைவுகளை சிங்கள தேசம் எதிர்நோக்கும் என்பதனை தெளிவுபடுத்த விரும்புகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# தமிழர் மீதான அராஜகங்களுக்கு அரசு பதில்கூறியே ஆகவேண்டும்

## பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிங்கள தேசம் தமிழர் மீது நடாத்தும் மனிதப் படுகொலைகளை வன்மையாக கண்டித்து யாழ்மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

தமிழீழ மக்களின் விடுதலைப்போர் வீரியம்பெற்று உலகளாவிய ரீதியில் நியாயப்பாட்டை நிலை நிறுத்திவரும் இவ் வேளையில் சிங்கள தேசத்தின் கையாளாகாத் தன்மையும், போர் வெறியும் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் மீதான கொலையாக விஷ்வ ரூபம் எடுத்து வருகிறது

இதற்கு எமது கடும் ஆட்சேபனைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

அண்மையில் தங்களுமைய தொழில் வாய்ப்புக்காகவும் வெளிநாடுகளில் இருந்துவரும் தமது உறவுகளை வரவேற்பதற்காகவும் கொழும்பு சென்ற யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த இளைஞர்களான இமானுவேல் தேவதாஸ் (சுரேஸ்) பிறன்சிஸ் றொன்சியாஸ் (குகதாஸ்) மற்றும் பூநகரியைச் சோந்த இளைஞர் ஒரு வரும் சிங்களக் கூலிப்படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டது தமிழ்மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இந்த மனிதநேயமற்ற காட்டு மிராண்டித்தனமான படுகொலைகளை யாழ.மாவட்ட பொதுஅமைப்புக்களின் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

கொலைகளை ஊக்குவிக்க சிங்கள ஆட்சியாளர்கள் முனைந்து வருவதையே இச்சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றது. நாகரிகம் படைத்த மக்களால் இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தப படுகொலைகளுக்காக அரசுமீது சர்வதேச சமூகம உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண் டிநிற்கின்றோம். தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த குடும்பத்தாருக்கு நிச்சயமாக அரசு விரைவில் பதில் கூறியே தீரவேண்டும் எனவும் அவ் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற)

# ஜனாதிபதியின் உறுதிமொழியை ஏற்க மறுத்தார் சோபிததேரர்

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சாகும்வரையான உண்ணாவிரதத்தினைக் கடைப்பிடித்து வரும் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித்தேரர் ஜனாதிபதி அனுப்பிய பதிலையும், உறுதிமொழியினையையும் நிராகரித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியளவில் ஜனாதிபதியின் பதிலை அமைச்சர் ரோகித போகல்லாகமவும், பராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவும் நேரடியாகச் சென்று மல்வத்த மகாநாயக்கர் திப்பட்டு வாவே சித்தார்த்த சிறிசுமங்கள தேரரிடம் சமர்ப்பித்தனர்.

அதன் பின்னர் மகாநாயக்கரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் பேச்சுவார்த்தையும் நடை பெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையில் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரும் கலந்து கொண்டார்.

பேச்சுவார்த்தையின் பின்னர் மல்வத்த மகாநாயக்க தேரருடன் ஜனாதிபதியின் தூதர்கள் உண்ணாநோன்பு இருக்கும் தேரரைச் சந்திக்கச் சென்றனர். எனினும், ஜனாதிபதியின் கடிதத்தை நிராகரித்த ஓமல்பே சோபிததேரர் தனது சாகும்வரையிலான உண்ணாவிரதத்தைத் தொடரும் என அறிவித்தார்.

இதேவேளை, இந்த உண்ணா விரதம் போராட்டம் குறித்துக் கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க, ஜனாதிபதி அனுப்பிய கடிதத்தை ஏற்க முடியாது என்று அத்துரலிய ரத்னதேரர் அறிவித்தார்.

விடுதலைப்புலிகளுடன் இது தொடர்பாக பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இறுதி வரைபு தயாரிக்கப்பட்டு முடிவுற்றதும் அது தொடர்பில் மகாநாயக்க தேரர்களிடம் கருத்தறிவதாகவும் ஜனாதிபதி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை கண்டி நகரில் உண்ணா விரதத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் கடைகளை மூடுமாறு சில பிக்குகள் கோரிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், நண்பகல் 1.00 மணிக்குப் பின்பே கடைகளை மூடுமாறு துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்ட போதிலும் நகரில் ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதுடன் பதற்றம் நீங்கி அமைதி நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் முதல் கண்டி மாநகரில் தலதா மாளிகைப் பிரதேசத்தைக் கண்டி பௌத்த சங்கங்கள் சோக பிரதேசமாக அறிவித்துள்ளன.

அத்துடன, உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஓமல்பே சோபித தேரரின் உடல் நிலையும் மோசமடைந்து வருவதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். (ற-4,2)

செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும் - குறள்

வலம்புரி

# மகாநாயக்கர்களை சந்திப்பதில் அவசரம் ஏன்?

இலங்கை ஒரு ஜனநாயக நாடு எனப்பேசப் படுகின்றது. எனினும் அதற்கான அறிகுறிகள் ஏதும் தெரிவதாக இல்லை. பொதுத்தேர்தல், வாக்களிப்பு எல்லாமே பௌத்த பீடங்களின் அதிகாரத்திற்கு உட்பட்டவை என்பதை நாட்டில் நடைபெறும் அண்மைக்காலச்சம்பவங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி கூட பௌத்த பீடங்களின் அதிகாரங்களை தாண்ட முடியாது என்பதே உண்மை.

பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத்தெரிவித்து சங்க ஆணை பிறப்பிக்கப்படும் என நான்கு மகாநாயக்கர்களும் தெரிவித்ததை அடுத்து ஜனாதிபதி அதிர்ந்துபோனார்.

நிறைவேற்று அதிகாரம் என்ற கர்வத்தில் இருந்தவரை அடக்கும் பலம் பௌத்தபீடங்களுக்கு உண்டு என்பதை அரசியல் ஆய்வாளர்கள் இப்போது தெளிவாக அறிந்துள்ளனர்.

சங்க ஆணை பிறப்பிக்கப்படும் என்ற பௌத்த பீடங்களின் எச்சரிக்கையை சாதாரண ஒரு விடயமாக கருதாமல் தலையில் இடிவிழுந்தது போல ஜனாதிபதி எண்ணிக்கொண்டமையானது இலங்கையின் அரசியல் இருக்கக்கூடிய பலவீனத்தையே சுட்டிநிற்கிறது.

பல்லின மக்கள் பலசமயங்கள இருக்ககூடிய இந்தநாட்டில் பௌத்தமே ஆளும் சமயமாகவும் பௌத்தர்களே ஆளுபவர்களாகவும் இருப்பது இந்த உலகில் இருக்ககூடிய முதல்தர சர்வாதிகாரமாகும்.

பௌத்தபீடங்களே நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்குமாயின் அரசியல் யாப்பு அதிகாரப் என்பன எதற்காக? பௌத்தபீடங்கள் தீர்மானிக்கின்றவர்களேயே ஆட்சியில் இருத்திவிட்டு தாம் நினைத்தவாறு ஆளவேண்டியது தானே. இந்தக்கேள்விகள் ஜனநாயகத்தை-சுதந்திரத்தை விரும்புகிறவர்களிடையே எழுந்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டிய நேரத்தில் சங்கஆணைக்காக அஞ்சுவது அரசியலில் இருப்போருக்கு அழகல்ல.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலமே சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப்பணியை மேற்கொள்ள முடியும் என்றால் அதனைச்செய்வதே ஆட்சிபீடத்தில் இருப்பவர்களின் கடமையாகும்.

அதேநேரம் நாட்டின் ஆட்சியை ஜனநாயக ரீதியில்-யதார்த்த சூழ்நிலைக்கு அமைவாக நடத்துவதற்கு யார்தடையாக இருக்கிறார்களோ அவர்கள் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் தண்டிக்கப்படவேண்டியவர்கள்.

இதில் இன, மத, மொழி என்ற பாகுபாடுகளுக்கு இம்மியும் இடம்கொடுக்கலாகாது. அவ்வகையில் பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பவர்கள் அதற்கு குழப்பம் செய்பவர்கள் எவராக இருந்தாலும் அவர்களை கைதுசெய்யுமாறு உத்தரவிடுவதே ஜனாதிபதியின் கடமையாகும். இது பௌத்த பீடாதிபதிகளுக்கும் பொருந்தும்.

இதனைத்துணிவோடு ஜனாதிபதி செய்வதே ஜனநாயகம் காப்பாற்றப்படுவதற்கான நடவடிக்கையாகும். இதனை விடுத்து சங்க ஆணை பிறப்பிக்கப்படும் என்ற எச்சரிக்கைக்கு பயந்து மகாநாயக்கர்களை அவசர அவசரமாக சந்திப்பது இயலாமையின் வெளிப்பாடாகும்.

# நடைமுறை அரசியல்வாதிகளுக்கு எதிர்கால சமுதாயம் சாபமிடும்

## அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண

எதிர்கால சமுதாயம் நடைமுறை அரசியல்வாதிகளுக்கு சாபமிடும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

நடைமுறை அரசின் செயற்பாடுகளைக் குழப்பி தமது அரசியல் இலாபங்களுக்காக இவர்கள் நாட்டைச் சிக்கல்களுக்குள்ளாகி உள்ளதாகவும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார் சில அரசியல் கட்சிகள் தமது அரசியல் இலாபங்களுக்காக எதிர்கால சமுதாயத்தை பலிகொடுத்திருப்பதாகவும் அவர்மேலும் குறிப்பிட்டார்.

தனி நபர்களும் அரசியல் கட்சிகளும் தத்தமது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கின்றார்களேதவிர மக்களின் வாழ்க்கை பற்றியோ, நாட்டின் எதிர்காலம் ஒருமைப்பாடு பற்றியோ சிந்திப்பதாக இல்லை தற்போதைய இக் காலகட்டத்தில் அரசியல்வாதிகளும் நாட்டைப்பற்றிச் சிந்திக்கும் புத்தியுள்ள மக்களும் ஒன்றுபட்டுச் செயற்படுவதே சிறப்பானதாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரு-2)

# இக்பால் அத்தாஸிற்கு கொமாண்டோ பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வாரப் பத்திரிகையின் பாதுகாப்பு நிலைபரம் குறித்து கட்டுரைகளை எழுதிவரும் ஊடகவியலாளர் இக்பால் அத்தாஸின் பாதுகாப்பிற்கென கடந்த 6 ஆம் திகதி முதல் கொமாண்டோ வீரர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே தனக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்குமாறு இக்பால் அத்தாஸ் இராணுவத் தளபதியிடம் விடுத்த கோரிக்கைக்கு இணங்கவே அவருக்கு இந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரு-4)

# வடமராட்சி மீனவர்கள் 23 பேர் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பகுதியில் வள்ளங்கள் வைத்திருந்து தொழிலில் ஈடுபட்டவந்த 23 மீனவர்கள் கொழும்பிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வள்ள உரிமையாளர்களிற்கு இதுவரை காலமும் உதவாத அரசு, தற்போது முதற்தடவையாக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள மீன்பிடி அமைச்சின் அலுவலகத்தில் இவர்களைச் சந்திக்கவுள்ளது.

இச்சந்திப்பில் தமக்கான உதவிகள் கிடைக்குமா என்ற எதிர்பார்ப்புடன் இந்த மீனவர்கள் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர். சந்திப்பிற்கான அழைப்புக் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் பல சங்கங்கங்களிற்கும் அனுப்பப்பட்டதாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். (ரு-43)

# மொனறாகலை சிறையில் கைதிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

மொனராகலை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகள் 6 பேர் நேற்று முன்தினம் முதல் சிறைச்சாலையின் கூரைமேல் ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளை சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தாக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தப்படுகின்றது.

சிறைச்சாலையில் இரு தரப்பினருக்குகிடையே ஏற்பட்ட மோதலைத் தடுத்துநிறுத்த முயற்சித்த வேளையிலேயே கைதிகள் தாக்கப்பட்டதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்தத் தாக்குதலில் காயமடைந்த கைதிகள் சிலர் மொனறாகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பளம் தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளை உண்ணாவிரதத்தை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ரு-8)

# மாகாண முதலமைச்சர் பதவியை கூரே இராஜிநாமாச் செய்வார்?

(கொழும்பு)

மேல்மாகாணசபை முதலமைச்சர் அடுத்துவரும் நாட்களினுள் தனது பதவியை இராஜிநாமா செய்யவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மேல்மாகாண முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே அடுத்துவரும் நாட்களினுள் தனது பதவியை இராஜிநாமா செய்துவிட்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பதவியேற்கவிருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

மேல்மாகாணசபை முதலமைச்சர் றெஜினோல்ட் கூரே அடுத்துவரும் நாட்களினுள் தனது பதவியை இராஜிநாமா செய்துவிட்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பதவியேற்கவிருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

றெஜினோல்ட்கூரே பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க தனது பதவியை விட்டுத்தர ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் விருப்பம் தெரிவித்துள்ளார் என்றும், அவருக்கு தற்போது வெற்றிடமாகவுள்ள தகவல் தொடர்பு ஊடகத்துறை அமைச்சுப் பதவி வழங்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ரு-4)

# விமானப்படையை பலப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளிடம் விமானங்கள் உள்ளதால் விடுதலைப் புலிகளின் விமானப்படையைவிட மேலதிகமாக இலங்கை விமானப்படையை பலப்படுத்த வேண்டியுள்ளது.

இதனைக் கருத்திற்கொண்டு இந்தியாவிடமிருந்து அதிநவீன வான் பாதுகாப்புக் கலங்களை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்றுவருவதாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இதனை இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொண்டபின் அதனை எவ்வாறு பயன்படுத்துவது குறித்தும் ஆலோசனை நடைபெற்றுவருவதாகவும் அவர் தெரிவித்தார். அதன் பின்னர் புலிகளின் விமானங்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அவர் கூறினார். (ச-4)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலையின் தற்போதைய நிலை தொடர்பாக ஆராயும் வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தலைவர், பொதுமுகாமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சமாச அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அங்கத்துவ சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்களைத் தவறாது சமுகமளிக்கும்படி சமாசத் தலைவர் சி.தவராசா கேட்டுள்ளார். அத்துடன் இக்கலந்துரையாடலுக்கு பத்திரிகையாளர்களுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (த)

# பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரி அலகின் கலைமாணிப்பகுதி II 2001இன் பரீட்சை முடிபுகள் வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்கள் தமது பெறுபேறுகளை யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சை அலகில் எதிர்வரும் 13ஆம் திகதியில் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பரீட்சை அலகின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.(அ.19)

# பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(வவுனியா)

யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்களின் விரிவுரைப் பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்துள்ளது. கடந்த புதன்கிழமை உயர்கல்வி பிரதி அமைச்சர், பல்கலைக்கழக மாணவர்கள், ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருக்கும் மாணவர் ஒன்றியத்திற்கும் இடையில் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்து பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.(ச)

# தினசரி தியானம்

## ௐ விவேகச் சிந்தனைகள்

இந்தப் பிரபஞ்சத்தின் சுகத்துக்கங்களைப் பற்றி யாருக்குக் கவலை? இவற்றையெல்லாம் கடந்து துணிவுடன் சொல்லுங்கள் பிரபஞ்ச சட்ட திட்டங்களுக்கு அப்பால் விரையுங்கள். பிரபஞ்சப் முழுவதும் மறையட்டும். தனியே நில்லுங்கள், நான் உண்மை - அறிவு - இன்பம்! நானே அவன். நானே அவன்.

சுவாமி விவேகானந்தர்

# தேரரின் உண்ணாவிரதம்....

உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை முதல் தொடர்ச்சியாக ஆறு நாட்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தார். நேற்று முன்தினம் மாலை 4 பௌத்த பீடாதிபதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது நாட்டில் ஒருமைப்பாட்டை காப்பதாக ஜனாதிபதி தெரிவித்தோடு மகாநாயக்க தேரர்களின் ஆலோசனையின்றி தாம் எந்த ஒரு நகர்வையும் செய்யப்போவதில்லை எனவும் உறுதிமொழி அளித்தார்.

இந்தத் தகவலை மகாநாயக்க தேரர்கள் நேற்றுக் காலை ஓமல்பே. சோபித தேரர்களுக்கு எடுத்துரைத்தனர். இதனையடுத்து, தனது உண்ணாவிரதப் போராட்டத்தை இடைநிறுத்துவதாக தேரர் அறிவித்தார். (ச-4,9)

# வவுனியா ஈ.பி.டி.பியின்...

தெரிவித்தனர். அதனையடுத்து அப்பகுதியில் இருந்த மக்கள் பீதியடைந்தனர்.

குருமன்காடுப் பகுதியிலுள்ள கடைகள் யாவும் உடனடியாக இழுத்துமூடப்பட்டன. சிறிதுநேரம் வவுனியா - மன்னார் வீதியில் கச்சேரி சந்தி தொடக்கம், குருமன்காடு சந்திவரையான பகுதியில் வாகனப் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்தது.

எனினும் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. இராணுவத்தினர், அதிரடிப்படையினர் மற்றும் குண்டுகளைச் செயலிழக்கும் பகுதியினரும் பொலிஸாரும் ஸ்தலத்திற்கு விரைந்து நிலைமைகளைப் பார்வையிட்டனர்.

வவுனியாவில் உள்ள யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.

சம்பவ இடத்திற்கு விஜயம்செய்த வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளம்செழியன் நேரடி விசாரணைகளை மேற்கொண்டார். இச் சம்பவத்தில் இறந்தவர்களின் சடலங்களை வவுனியா பொது வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்ட நீதிபதி, அவற்றின் மீதான மருத்துவப் பரிசோதனைகளை நடாத்துமாறு வைத்திய அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இச் சம்பவம் தொடர்பாக மேல் விசாரணைகளை நடத்துமாறு பொலிஸாருக்கு அவர் பணித்துள்ளார். இன்னொரு தமிழ் அரசியல் கட்சி ஒன்றினாலேயே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. (ச-4-9)

# இம் மாத இறுதிக்குள்...

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு முதல் நேற்று முன்தினம் அதிகாலைவரை அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகளுடன் சுமார் ஆறு மணிநேரம் நடந்த பேச்சுவார்த்தையின் பின்னரே ஜனாதிபதி இம்முடிவுக்கு வந்துள்ளதாக கூறப்படுகிறது.

இலங்கையின் நலனைக் கருத்தில் கொண்டே இப் பொதுக் கட்டமைப்பில் கைச்சாத்திட தீர்மானித்ததாக ஜனாதிபதி ஆலோசனை கூட்டத்தின்போது கூறியுள்ளார்.

எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பில் கையொப்பமிடத் தீர்மானித்துள்ளதாகவும், தன்னால் இப் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக கைச்சாத்திட முடியாதுபோனால் இக் காரியத்தை ஆற்றுவதற்கு தனக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் யார் யார் என பெயர் விபரங்களுடன் மக்களுக்கு தெரியப்படுத்தப்போவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி தனித்து தீர்மானம் எடுக்கக்கூடாது என்றும், ஜனாதிபதியா அல்லது கட்சியா முக்கியம் என்பது குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபையை கூட்டி முடிவு செய்யவேண்டும் என நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதற்கு ஜனாதிபதியும், கூட்டத்திற்கு சமுகமளித்திருந்த ஏனைய அமைச்சர்களும் இணக்கம் தெரிவித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# மற்றுமொரு பிக்கு உண்ணாவிரதம்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மற்றுமொரு பிக்கு நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கியுள்ளார்.

தேசியபிக்கு முன்னணியைச் சேர்ந்த தம்பர அமிலதேரர் கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு யோசனை முழுமையாக கைவிடப்படும் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உறுதியளிக்கும்வரை இவ் உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று தேசிய பிக்கு முன்னணி அறிவித்துள்ளது.

மகாநாயக்கர்களின் அனுமதியின்றி இந்த உத்தேச பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படமாட்டாது என்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வழங்கிய உறுதிமொழியை ஏற்று ஐந்து நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் நேற்று காலை உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்ட நிலையில், தேசியபிக்கு முன்னணியின் உறுப்பினரான தம்பர அமில தேரர் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உத்தேசப் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து காலி நகரில் அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலைக்கு அருகே 13 பிக்குகள் இன்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ச)

## பிக்குகள் தீக்குளிப்பார்களாம்?

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிக்குகள் 6 பேர் தீக்குளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கும், அதில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சேர்த்துக்கொள்வதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தே தீக்குளிக்கப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரு-8)

## மீளக்குடியமர்த்துமாறு...

இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் எனக்கோரி பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தினர்.

இப் பொதுக்கூட்டத்தினை தொடர்ந்து மக்கள் ஊர்வலமாக புறப்பட்டு ஆசைப்பிள்ளை ஏற்றத்தை அடைந்து அவ்விடத்தில் போராட்டத்தை நடத்தினர். அதன் பின்னர் மீண்டும் ஊர்வலமாகப் புறப்பட்டு உசன் சந்தியில் 55 ஆவது படையணியின் சிரேஷ்ட படை அதிகாரி மேஜர் ரோகாசிடம் தங்களை தங்கள் வீடுகளில் குடியேற அனுமதிக்கவேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், திருமதி பத்மினி சிதம்பரநாதன், எஸ்.சிவனேசன் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தென்மராட்சி மக்கள் அடுத்தகட்டமாகப் பிரமாண்டமான போராட்டம் ஒன்றை அடுத்த மாதம் 4 ஆம் திகதி கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரிவரை நடத்தவுள்ளதாக போராட்ட ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (து-43)

## பொலநறுவையில்...

எனப்படும் சௌந்தரராஜன் சொரூபன் மற்றும் மன்னம்பிட்டியைச் சேர்ந்த ராஜு ஆகியோர் தொடர்பாக தகவல் எதுவும் தெரிவில்லை எனக் கூறப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் இம் மூவரும் பயணம் செய்த இரண்டு சைக்கிள்களும் அவர்களுடைய பாதணிகளும் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் உயிரிழந்தவர் எந்தத் தரப்புடன் தொடர்புடையவர் என்பது தம்முடைய ஆரம்ப விசாரணைகளில் தெரியவரவில்லை என அவர்கள் தெரிவித்தனர். (ச-4)

## யாழ்...

வழங்கவேண்டுமென தெரிவித்து சந்திரிகா குமாரதுங்க மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி ஆகியோருக்கு குருநகர்ப் பகுதி மக்களால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.(ச)

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயலட்சுமி கைலாசபிள்ளை

(மண்டைதீவு)

மண்டைதீவு 6ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொக்குவில் மணியகாரன் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. விஜயலட்சுமி கைலாசபிள்ளை அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளையின் அன்பு மனைவியும், மகேந்திரலிங்கம் (செயலாளர் பிரதேசசபை வேலணை), சற்குணலிங்கம் (ACTION FAIM JAFFNA) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்றவர்களான இலங்கநாதர் செல்லம்மா தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற நடனசபாபதி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், அன்னபூரணம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), காலஞ்சென்ற தானியலட்சுமி, ஜெயபாக்கியலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), குமாரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நித்தியலட்சுமி, செல்வநிதி ஆகியோரின் அன்பு மாமியாரும், அருணன், அஜந்தன், சுகன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில்கிழக்கு,
கொக்குவில்

தகவல்
கை. மகேந்திரலிங்கம் (மகன்)
கை. சற்குணலிங்கம் (மகன்)
(C-441)


## விற்பனைக்கு

ஆண்களுக்கான 3/4 சைக்கிள் வீட்டுப் பாவனையிலுள்ளது. உடனடியாக விற்பனைக்குண்டு.

நேரில் தொடர்பு:
T.P: 077 6648751
ஆசிரியர்: R.பாலசுப்பிரமணியம்.
17/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
(9596)

## நாதன்ஸ் சினிமா

குளிரூட்டப்பட்டது | யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக (4 வது இறுதி வாரம்)

அறிந்தும் அறியாமலும்



கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

13.06.2005 திங்கள் (நாளை) முதல்

THE DAY AFTER TOMORROW (தமிழாக்கம்)

சுனாமி போன்ற அழிவுகளை விபரிக்கும் சித்திரம்

## மனோகரா யாழ்.

08.06.2005 முதல்

ஸ்ரீகாந், கோபிகா, விவேக் நடித்த




கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30

## நிறைஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், ரீமாசென், பிரகாஸ்ராஜ், வடிவேல் நடித்த




கா.நே: 11.00, 2.[illegible], 6.[illegible]

## திருமண வாழ்த்துக்கள்

11.06.2005 அன்று இல்லறமெனும் நல்லறம்தனில் இணைந்த

திரு. செந்தில்குமரன்
திருமதி சுஜாதா செந்தில்குமரன்

தம்பதிகள் இறையருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

வலம்புரிக் குடும்பம்

(இ-001)

EXPOAIR your friend in the skies...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.



எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.